நாள்.04.09.2023
எம்.சி.ஓ.பி எண்.5543/2019
ம.சா.1
பெயர்.கன்னியப்பன்
த/பெ.திரு.சிட்டிபாபு
வயது.60

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 10 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்துள்ளதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். 10.09.2019 அன்று இந்த விபத்து நடைபெற்றது. இரவு 8.30 மணிக்கு விபத்து நடந்தது. நான் பாதசாரியாக சாலையை குறுக்கே கடந்தேன். அப்போது இருசக்கர வாகனம் வந்து மோதியது. நான் மயக்கமாகி விட்டேன், அங்கு இருந்தவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். நான் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு எனக்கு சிகிச்சை அளித்தார்கள். நான்அங்கு 25 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் முதலமைச்சர் விரிவான காப்பீடு திட்டத்தில் சிகிச்சை பெற்றேன். நான் செக்யூரிட்டி வேலை செய்கிறேன். அதற்கு தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வருமானத்தை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் இழப்பீடு கேட்டுள்ளது தவறு என்றும் எனக்கு பரிகாரம் கிடைத்து இருக்கிறது என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

Taken down to the words of the witness in my presence in the open Court and was read over to the Witness and accepted by him/her to be correct.
Date:04.09.2023.

S/d... J.K.DHILIP
IV Judge
Court of Small Causes.